# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 2012 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம்

---

*(2012 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---


*2012, மாச்சு மாதம் 30 ஆம் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 15.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## *2012 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம்*

[*2012 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச. வ. ஓ. 9/2012*

## *2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

***1***. *இச்சட்டம், 2012 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, சேர் பெறுமதி வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென் பதுடன், இயைபான பிரிவுகளில் வெவ்வேறு நடைமுறைத் தேதிகள் குறித்துரைக்கப்பட்டாலொழிய, 2012, சனவரி 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.*

*2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***2***. *(இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தாற் பின்வரு மாறு திருத்தப்படுகின்றது :-*

*(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் -*

*(அ) அதன் (உ) என்னும் உட்பந்தியின் (i) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-*

*"(i) கருத்திட்டச் செயற்படுத்துகைக் காலப் பகுதியின்போது, முதலாம் அட்டவணை யின் II ஆம் பாகத்தின் (ஊ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டவாறாக, 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல் நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் நியதிகளின் படி ஏதேனும் செயல்நுணுக்க அபிவிருத் திக் கருத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள*

2-PL 006652 - 1,175 (2012/03)

ஆளொருவர், அல்லது (2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து பயனுள்ளதாக) முதலாம் அட்டவணையின் பாகம் II இன் (ஊ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட குறிப்பிட்ட ஏதேனும் கருத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள பதிவுசெய்யப்பட்ட ஆளொருவர் ;"

(2) அதன் (iv) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(v) மேலே விடயங்கள் (i), (ii), (iii) அல்லது (iv) என்பவற்றிற் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனும் பதிவுசெய்யப்பட்ட ஆளுக்கு 2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் எவையேனும் பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குகின்ற பதிவுசெய்யப்பட்ட எவரேனுமாள் ; ஆயின், ஆணையாளர் தலைமையதிபதி, கிடைக்கக்கூடிய தகவலின்மீது, அத்தகைய வழங்கல்களின் பெறுமதி அத்தகைய பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குகின்ற அத்தகைய பதிவுசெய்யப்பட்ட ஆளின் மொத்த வழங்கல்களின் ஐம்பது சதவீதத்தை விஞ்சுகின்றதெனத் திருப்திப்படுத்தப்படுகின்றார்.";

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவுக்கான இரண்டாவது காப்புவாசகத்தின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலம் :-

"(ஈ) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 16ஈ என்னும் பிரிவின்கீழும் மற்றும் 17அ என்னும் பிரிவின் கீழும் வரிவிலக்களிப்புக்குத் தகைமைபெற்ற ஏதேனும் தொழில்முயற்சியினால், கருத்திட்டச் செயற்படுத்துகைக் காலப்பகுதியின்போது,

முதலாம் அட்டவணையின் பாகம் II இன் (இ) என்னும் பந்தியின் (xxxiv) ஆம் விடயத்திற் குறிப்பீடுசெய்யப்பட்ட, 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபையுடன் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கமைய, அவ்வுடன்படிக்கையிற் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படுவதற்காக அத்தகைய தொழில் முயற்சியினால் இறக்குமதிசெய்யப்பட்ட பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி அல்லது சாதனங்கள்மீது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அதன் முதலாவது காப்புவாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

"ஆயின் -

(அ) (i) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் ஏற்றுமதிக்காகத் தைத்த ஆடைகளின் உற்பத்தியாளரினால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின்கீழ் இலங்கை முதலீட்டுச் சபையினால் உள்ளூரில் விற்பனைக்காக அனுமதிக்கப்படுகின்றவாறான ; அல்லது

(ii) சுங்கத் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் ஏற்றுமதிக்காகத் தைத்த ஆடைகளை உற்பத்தி செய்கின்ற வேறெவரேனும் தைத்த ஆடைகளின் உற்பத்தியாளரினால் உள்ளூரில் விற்பனைக்காக 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபையினால் அனுமதிக்கப்படுகின்றவாறான,

அத்தகைய நூற்றுவீதத்தினுள்ளான எவையேனும் தைத்த ஆடைகளை

வழங்குவதன் மீது வருமதியாகவுள்ள வரித்தொகை, இலங்கையினுள் அவ்வாறு வழங்கப்பட்ட அத்தகைய ஒவ்வொரு தைத்த ஆடைக்கும் இருபத்தைந்து ரூபா வாதல் வேண்டும் ;

(ஆ) (i) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் ஏற்றுமதிக்காக நெய்யப்பட்ட துணிவகைகளின் உற்பத்தியாளரினால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன் படிக்கையின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையினால் உள்ளூரில் விற்பனைக்காக அனுமதிக்கப்படுகின்றவாறான ; அல்லது

(ii) சுங்கத் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் ஏற்றுமதிக்காக நெய்யப்பட்ட துணி வகைகளை உற்பத்தி செய்கின்ற வேறெவரே னும் நெய்யப்பட்ட துணிவகைகளின் உற் பத்தியாளரினால் உள்ளூரில் விற்பனைக் காக மேற்சொல்லப்பட்ட சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபை யினால் அனுமதிக்கப்படுகின்றவாறான,

அத்தகைய நூற்றுவீதத்தினுள்ளான எவையேனும் நெய்யப்பட்ட துணிவகைகளை வழங்குவதன் மீது வருமதியாகவுள்ள வரித்தொகை, கிலோகிராமொன் றுக்கு நாற்பது ரூபாவாதல் வேண்டும்.'';

(2) ஒராம் உட்பிரிவுக்கான இரண்டாவது காப்புவாசகத்தில் ''(235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஏதேனும் தீர்வை அல்லது 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான சுங்கத்தீர்வை உட்பட வேறு வரி அல்லது அறவீடு எதுவும் தைத்த ஆடைகளின் மீதான விற்பனையின் மீது விதிக்கப்படுதல் அல்லது அறவிடப் படுதல் ஆகாது.'' என்னும் சொற்களுக்கும் எண்களுக் கும் பதிலாக ''(235 ஆம் அத்தியாயமான)

சுங்கக்கட்டளைச் சட்டத்தின் கீழான ஏதேனும் தீர்வை அல்லது 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான சுங்கத்தீர்வை உட்பட நாட்டினுட் பிரவேசிக்கும் இடத்தில் செலுத்தப்படற்பால தான வேறு வரி அல்லது அறவீடு எதுவும் அத்தகைய தைத்த ஆடைகளின் அல்லது நெய்யப்பட்ட துணி வகைகளின்மீது விதிக்கப்படுதல் அல்லது அறவிடப் படுதல் ஆகாது.'';

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் இரண்டாவது காப்புவாசகத்தின் (உ) என்னும் பந்தியில் ''2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்'' என்ற எல்லாச் சொற்களிலிருந்தும் எண்களிலிருந்தும் ''மேன்மிகை யொன்று உள்ளவிடத்து'' என்ற சொற்களும் எண்களும் வரையிலானவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

''(உ) 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஈ) என் னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பண்டங் களின் ஏற்றுமதியாளர்களுக்குப் பண்டங் களை வழங்குபவ ரொருவராகவுள்ள, 2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து (2) ஆம் உட் பிரிவின் (உ) என்னும் பந்தியின்கீழ் ஆணை யாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப் பட்ட பின்போடற்றிட்டத்தின்கீழ் அடுத்துப் பின்னர் கொண்டுவரப்பட்டவர்களான (2) ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பதிவுசெய்யப்பட்ட எவரேனுமாளுக்கு அல்லது ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் பதிவுசெய்யப்பட்ட எவரேனும் பதிவுசெய்யப் பட்ட ஆளுக்குப் பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குபவரொருவராகவுள்ள வரும் புடவைப் பங்கீட்டுச் சபையுடன் பதிவு செய்யப்படுகின்றவருமான பதிவுசெய்யப் பட்ட

எவரேனுமாளின் 2 ஆம் பிரிவின்கீழ் பின் போடப்பட்ட வரியுட்பட உள்ளீட்டு வரி யின் ஏதேனும் மேன்மிகை உள்ளவிடத்து, வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக் காகப் பந்தி (இ) இல், (ஈ) இல் அல்லது (உ) என்னும் பந்தியின் நேரொத்த ஏற்பாடுகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட வழங்குநர்களுக்கான வழங்கல்களின் பெறுமதி ஐம்பது சதவீதத் துக்கு மேற்பட்டதாக விருப்பின்,";

(4) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் மூன்றாவது காப்பு வாசகத்தில் "ஆயின் ; மேலும்," என்னும் சொற்களி லிருந்து "முன்காவப்படுதல் வேண்டும்."; என்னும் எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

ஆயின், மேலும், பதனிடாது மீள்விற்பனைக்காகப் பண்டங்களை இறக்குமதி செய்கின்ற பதிவுசெய்யப்பட்ட ஆளொருவரின் விடயத்தில், 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் செலுத்தப்பட்ட வரியைக் குறித்துநிற்கும் உள்ளீட்டு வரியின் மேன்மிகை மீளளிக்கப்படுத லாகாது, ஆனால், 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள்மீதான வரிச் சட்டத்தின்கீழ், 2002, யூலை 31 ஆந் தேதியன்றுள்ளவாறாக உள்ளீட்டு வரியின் ஏதேனும் மேன்மிகை உட்பட்ட அத்தகைய உள்ளீட்டு வரி, குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்காகப் பின்போடுதலை ஏற்புடையதாக்கும் நோக்கங்களுக்காக வெளியிடப்பட்ட வழிகாட்டுநெறிகளிற் குறித்துரைக்கப் பட்ட நிபந்தனைகளுக்கும் வரையறைகளுக்கும் அமைய, இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின் விடயம் (i), (ii), (iii) அல்லது (iv) என்பவற்றிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பதிவுசெய்யப்பட்ட எவரேனுமாளுக்கு அத்தகைய வழங்கல்கள் செய்யப் படும் விடயத்திற்றவிர, முன்கொணரப்படுதல் வேண்டும்.";

(5) அப்பிரிவின் (10) ஆம் உட்பிரிவில் :-

(i) (அ) என்னும் பந்தியில் "2010, திசெம்பர் 31 ஆம் தேதியன்றுள்ளவாறு உட்சேர்க்கப் படாத மீதி ஏதேனுமிருப்பின், அது, முன் கொணரப்படுதல் வேண்டுமென்பதுடன்,

ஒவ்வொரு மாதத்துக்கும் உட்சேர்க்கப்படாத தொகையின் பத்துசதவீதத்துக்கு சமமான வொரு பணத்தொகையை விஞ்சாது ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்குப் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவரினால் உரிமைகோரவும்படலாம் ; ஆயின் அத்தகைய பணத்தொகை, அனுமதிக்கப்படற்பாலதான உள்ளீட்டு வரவை வெளியீட்டு வரியிலிருந்து கழித்தபின்னர் அத்தகைய ஆளினாற் செலுத் தப்படற்பாலதான தேறிய வரியின் ஐந்து சதவீதத்தை விஞ்சுதலாகாது ;''; என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

''2010, திசெம்பர் 31 ஆம் தேதியன்றுள்ள வாறு உட்சேர்க்கப்படாத மீதி ஏதேனுமிருப் பின், அது, முன்கொணரப்படுதல் வேண்டு மென்பதுடன் -

(அ) 2011, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், ஆனால் 2012, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிவிதிக் கப்படற்பாலதான காலப்பகுதிக்கு, ஒவ்வொரு மாதத்துக்கும் உட்சேர்க் கப்படாத தொகையின் பத்துசதவீதத் துக்குச் சமமானவொரு பணத் தொகையை விஞ்சாததும், ஆனால் அத்தகைய ஆளினால் வெளியீட்டு வரியிலிருந்து அனுமதிக்கப்படற் பாலதான உள்ளீட்டு வரியைக் கழித்த பின்னர் செலுத்தப்படற்பாலதான தேறிய வரியின் ஐந்து சதவீதத்தை விஞ்சாததுமாகப் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவரினால் உரிமைகோரவும் படலாம் ;

(ஆ) *2012, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு, ஒவ்வொரு மாதத்துக்கும் உட்சேர்க்கப்படாத தொகையின் பத்து சதவீதத்துக்கு சமமானவொரு பணத் தொகையை விஞ்சாததும், ஆனால் அத்தகைய ஆளினால் வெளியீட்டு வரியிலிருந்து அனுமதிக்கப்படற்பாலதான உள்ளீட்டு வரியைக் கழித்தபின்னர் செலுத்தப்படற்பாலதான தேறிய வரியை விஞ்சாததுமாகப் பதிவுசெய்யப்பட்ட ஆளொருவரினால் உரிமைகோரவும்படலாம்;";*

(ii) *அவ்வுட்பிரிவுக்கான முதலாவது காப்புவாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-*

"*ஆயின்,-*

(அ) *2010, திசெம்பர் 31 ஆந் தேதியன்றுள்ளவாறு உட்சேர்க்கப்படாத உள்ளீட்டு வரவையுடைய, ஆனால் 2011, சனவரி 1 ஆந் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வரிக்கு உட்பட்ட வரிவிதிக்கப்படற்பாலனவான வழங்கல்கள் எவற்றையும் ஒரு பதிவுசெய்யப்பட்ட ஆள் கொண்டிராத அத்தகைய ஆளின் விடயத்தில் ; அல்லது*

(ஆ) *2012, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து ஒவ்வொரு மாதத்துக்கும் ஒரு பதிவுசெய்யப்பட்ட ஆளின் உட்சேர்க்கப்படாத உள்ளீட்டு வரவின் உள்ளபடியான எதிரீடு, (10) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்படுகின்றவாறாக 2012, திசெம்பர் 31 ஆந் தேதியன்*

றுள்ளவாறான உட்சேர்க்கப்படாத உள்ளீட்டு வரவின் பத்துசதவீதத்தை விஞ்சாதவிடத்து, அத்தகைய ஆளின் விடயத்தில்,

பின்வரும் முறையில் உட்சேர்க்கப்படாத உள்ளீட்டு வரவுத்தொகையை நிச்சயித்தபின்னர் அது எதிரீடு செய்யப்படலாம்;";

(i) 2011, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர், ஆனால் 2012, சனவரி 1 ஆந் தேதிக்குமுன்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக, விடயத்திற்கேற்ப, ஒன்றில் பந்தி (i), பந்தி (ii), பந்தி (iii) அல்லது பந்தி (iv) என்பவற்றில் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் -

(அ) 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்புகள் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் உரிமமளிக்கப்பட்ட தொலைத் தொடர்புச் சேவைகளின் தொழிற் படுத்துநராகவுள்ள பதிவுசெய்யப்பட்ட ஆளொருவரின் விடயத்தில், எதிரீடானது, 2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான தொலைத்தொடர்பு அறவீடாக அவரினால் செலுத்தப்படற்பாலதான பணத்தொகைக்கெதிராகச் செய்யப்படலாம் ;

(ஆ) வருமானவரி செலுத்துவதற்கு ஆளாகவுள்ள பதிவுசெய்யப்பட்ட ஆளொருவரின் விடயத்தில், எதிரீடானது, 2011, சனவரி 1 ஆந் தேதிக்குப் பின்னர் அத்தகைய ஆளினால் வருமான வரியாகச் செலுத்தப்படற்பாலதான பணத்தொகைக்கெதிராகச் செய்யப்படலாம் ;

(இ) மேலே ஒன்றில் (i) ஆம் அல்லது (ii) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகாத ஆளொருவரின் விடயத்தில், எதிரீடானது, ஆணையாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப்பட்ட, அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் வரியாக அத்தகைய ஆளினால் 2011, சனவரி 1 ஆந் தேதிக்குப் பின்னர் செலுத்தப்படற்பாலதான பணத்தொகைக்கெதிராகச் செய்யப்படுதல் வேண்டும் ;

(ஈ) மேலே ஒன்றில் பந்தி (i), (ii), (iii) என்பவற்றின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகாத ஆளொருவரின் விடயத்தில், எதிரீடானது, விடயத்தின் நிகழ்வுகளைக் கவனத்துட் கொண்டபின்னர் ஆணையாளர் தலைமையதிபதியின் அங்கீகாரத்துடன் 2011, யூலை 13 ஆந் தேதிக்குப்பின்னர், நாட்டினுட் பிரவேசிக்கும் இடத்தில் செலுத்தப்படற்பாலதான வரிக்கெதிராகச் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் கவனத்துட்கொள்ளப்படலாம்.

(ii) 2012, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக, ஒன்றில் பந்தி (i), பந்தி (ii) அல்லது பந்தி (iii) என்பவற்றில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறான முறையில் செலுத்தப்படற்பாலதான வரிக்கெதிராக -

(அ) 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்புகள்

சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் உரிமமளிக்கப்பட்ட தொலைத்தொடர்புச் சேவைகளின் தொழிற்படுத்துநராகவுள்ள பதிவுசெய்யப்பட்ட ஆளொருவரின் விடயத்தில், எதிரீடானது, 2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான தொலைத்தொடர்பு அறவீடாக அவரினால் செலுத்தப்படற்பாலதான பணத் தொகைக்கெதிராகச் செய்யப்படலாம்; அல்லது

(ஆ) உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப்பட்ட ஏதேனும் வரியைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள பதிவுசெய்யப்பட்ட ஆளொருவரின் விடயத்தில், எதிரீடானது, ஆணையாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப்பட்ட, அப்போதைக்கு வலுவிலுள்ள எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் கீழ் வரியாக அத்தகைய ஆளினால் 2012, சனவரி 1 ஆந் தேதிக்குப் பின்னர் செலுத்தப்படற்பாலதான பணத் தொகைக்கெதிராகச் செய்யப்படலாம் ; அத்துடன்

(இ) மேலே (i) ஆம் மற்றும் (ii) ஆம் பந்திகளின் கீழான ஏற்பாடுகள் ஏற்புடையனவாகாத பதிவுசெய்யப்பட்ட ஆளொருவரின் விடயத்தில், விடயத்தின் நிகழ்வுகளைக் கவனத்துட் கொண்ட பின்னர் ஆணையாளர் தலைமையதிபதியின் அங்கீகாரத்துடன் 2012, சனவரி 1 ஆந் தேதிக்குப் பின்னர், நாட்டினுட் பிரவேசிக்கும்

இடத்தில் செலுத்தப்படற்பாலதான வரிக்கெதிராகச் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் கவனத்துட் கொள்ளப்படலாம்.

இவ்வுட்பிரிவின் நியதிகளின்படி செலுத்தப்படற் பாலதான வரிக்கெதிராக ஒவ்வொரு மாதத்துக்கு மான எதிரீடு -

(i) அத்தகைய எதிரீடு, 2011, சனவரி 1 ஆந் தேதியன்றுள்ளவாறான ஆனால் 2012, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னரான வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு ஏற்புடையற்பாலதாக விருக்குமிடத்து, 2010, திசெம்பர் 31 ஆந் தேதியன்றுள்ளவாறான உட்சேர்க்கப்படாத உள்ளீட்டு வரவின் பத்து சதவீதத்தை அல்லது மேலே விதிக்கப்பட்ட இயைபான வரியின் ஐந்து சதவீதத்தை, இவற்றுள் எது குறைவாகவுள்ளதோ அதனை விஞ்சுதலாகாது ;

(ii) அத்தகைய எதிரீடு, 2011, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிவிதிக்கப் படற்பாலதான காலப்பகுதிக்கு ஏற்புடையற் பாலதாகவிருக்குமிடத்து, 2010, திசெம்பர் 31 ஆந் தேதியன்றுள்ளவாறான மொத்த உட்சேர்க்கப்படாத மீதியிலிருந்து பன்னிரெண்டு மாத காலப்பகுதியின்போது செலுத்தப்படற்பாலதான வரியை எதிரீடு செய்தபின்னர் 2010, திசெம்பர் 31 ஆம் தேதியன்றுள்ளவாறான உட்சேர்க்கப்படாத உள்ளீட்டு வரவில் பத்து சதவீதத்தை அல்லது 2011 திசெம்பர் 31 ஆம் தேதியன் றுள்ளவாறான தேறிய உட்சேர்க்கப்படாத சேர்மீதியை இவற்றுள் எது குறைவாக வுள்ளதோ அதனை விஞ்சுதலாகாது.".

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (iv) ஆம் பந்தியில் "எவரேனும் ஆளினால்," என்னும் சொற்களுக்குப் பதிலாக "எவரேனும் ஆளினால் :

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 25அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

ஆயின், எவ்வாறாயினும், ஒரு கூறு நம்பிக்கைப் பொறுப்பினால் அல்லது ஒரு பரஸ்பர நிதியத்தினால் நிதிச் சேவைகள் வழங்கப்படுதலானாது, இப்பிரிவின் நோக்கத்துக்காக ஒரு நிதிச்சேவையாகக் கொள்ளப்படுதலாகாது."

என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

**5**. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை, அதன் பாகம் II இல் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.*

(1) அப்பாகத்தின் பந்தி (அ)வில் :-

(i) அதன் (x) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும் :-

"(x) சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணமும் குறியீட்டுமுறைமை இலக்கங்களும் என்பதன்கீழ் வகுப்பாக்கஞ்செய்யப்பட்ட கமத்தொழில் எந்திரத்தொகுதி, மண்வெட்டிகள், கவைமுள், உரம் (2004.07.01 ஆந் தேதியிலிருந்து பயனுறும்), ஆர்டீமியா முட்டைகள் மற்றும் புல்கரிப் பாசி ;"

(ii) அதன் (xii) ஆம் விடயத்தில் "2010, திசெம்பர் 31 ஆந் தேதிக்குப் பிந்தாமல் இறக்குமதி செய்யப்படும் நிர்மாணத்தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் எந்திரத்தொகுதி," என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "நிர்மாணத் தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் எந்திரத்தொகுதி" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(iii) அதன் (xxi) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(xxii) (i) லொறிகள், பாரவண்டிகள், பஸ் வண்டிகள், விளையாட்டுகளுக்கான சாதனங்கள், இறப்பர் அல்லது பிளாத்திக்குப் பொருட்களைத் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் எந்திரத்தொகுதி, வெயில் காப்புக் கண்ணாடிகள், நறுமண மூட்டிகள், வார்படம், (உருக்கு, கண்ணாடி, இறப்பர் அல்லது பிளாத்திக்கு), நிழற்படப் பதிவு நுட்பப்பண்புடைய பகுதியளவில் ஊடுகடத்தும் உபாயங்கள் ;

(ii) மூக்குக்கண்ணாடிகளையும் மூக்குக் கண்ணாடிச் சட்டங்களையும் உற்பத்தி செய்வதற்கான மூலப் பொருட்கள் ;

(iii) கோழிவளர்ப்புத் தொழிலுக்கான இனங்களும் உதிரிப்பாகங்களும் ;

(iv) (அரியப்பட்ட) மரம் ;

(v) *1979* ஆம் ஆண்டின் *40* ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வர்த்தமானி அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்டவாறு நாட்டினுட் பிரவேசிக்கும் இடத்தில் இறக்குமதியின்போது செலுத்தப்படற்பாலதான வேறேதேனும் வரியை விதிப்பதற்குப் பதிலாகக் குறித்தவொரு வீதத்திலான சுங்கத்

தீர்வைக்கமைய, உள்நாட்டுப் பாவனைக்காக நெய்யப்பட்ட துணி வகைகள் ;

சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணமும் குறியீட்டுமுறைமை இலக்கங்களும் என்பதன்கீழ் வகுப்பாக்கஞ் செய்யப்பட்டவை ;

(xxiii) ஏதேனும் சர்வதேச நிகழ்ச்சியை இலங்கையில் நடாத்துவதன்மூலம் நாட்டிற்கான பொருளாதார நன்மையைக் கவனத்துட்கொண்டு நிதியமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய நிகழ்ச்சிக்கான பண்டங்கள்.";

(2) அப்பாகத்தின் (ஆ) என்னும் பந்தியில் :-

(i) உட்பந்தி (அ) என்பதில், (ii) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுக :-

(ii) "2012, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் கொடுப்பனவுக்காக வருமதியாகவரும் ஏதேனும் வாடகை தொடர்பில், இருபத்தெட்டுக்குக் குறையாத பயணிகள் ஆசனக் கொள்ளளவுள்ள லொறிகள், உழவு இயந்திரங் கள் அல்லது மோட்டார் கோச்சுக்கள்.";

(ii) அதன் (xiii) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலமும் :-

"(xiii) இறக்குமதி செய்யப்பட்ட பதனிடப்படாத வெட்டுமரக் குற்றிகள் அல்லது கப்பல்கள் அல்லது 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (10) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியிற்

குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி அத்தகைய பொருள் தொடர்பில் செலுத் தப்படற்பாலதாதல் வேண்டுமென்ற நிபந்தனைக்கமைய, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின்கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுக் கமைந்த ஏதேனும் பொருள்;";

(iii) அதன் (xxxv) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(xxxvi) (i) நீர்வலு அல்லது காற்றுவலு எந்திரத்தொகுதியும் சாதனங் களும் ;

(ii) விசையாழிகள் ;

(iii) தகரத்திலடைக்கப்பட்ட மீன் அல்லது உள்ளூரில் தயாரிக்கப் பட்ட மூலப்பொருட்களைப் பயன்படுத்திக் களிமண் மட் பாண்டத் தயாரிப்புகள் ;

(iv) சுற்றுலாப்பயணி ஹோட்டல் களின் அல்லது விமானச்சேவை களின் தேவைப்பட்ட அளவுக் குறிப்பீட்டுக்கு உள்ளூரில் பெற் றுக்கொள்ளப்பட்ட மூலப் பொருட்களைப் பயன்படுத்திய தயாரிப்புகள் ;

(v) இறக்குமதிகளை மாற்றீடு செய் கின்ற இனங்காணப்பட்ட அரச நிறுவனங்களுக்கான குறித் துரைக்கப்பட்ட தயாரிப்புகள்.

இந்நோக்கத்துக்காக வழிகாட்டுநெறிகளில் குறித்துரைக் கப்பட்ட நிபந்தனைகளின்படி, அத்தகைய தயாரிப்புகள் உள்ளூரில் பெறுமதிசேர்க்கப்பட்ட தயாரிப்புகளாக விருக்கும் அளவுவரை உற்பத்தியாளரினால் உள்ளூரில் உற்பத்திசெய்யப்பட்டவை ;

(xxxvii) (i) இலங்கை முதலீட்டுச் சபையுடன் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின் கீழ் எவையேனும் சலுகைகளைத் துய்க்காத எவரேனும் உற்பத்தியாளரினால் உள்நாட்டுச் சந்தையிலுள்ள உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட நெய்யப்பட்ட துணி வகைகள் ;

(ii) *1979* ஆம் ஆண்டின் *40* ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஆம் தேதிய ஆம் இலக்க வர்த்தமானி அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்டவாறு நாட்டினுள் பிரவேசிக்கும் இடத்தில் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் இறக்குமதியின்மீது வேறேதேனும் வரி விதிக்கப்படுவதற்குப் பதிலாக, சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணமும் குறியீட்டு முறைமை இலக்கங்களும் என்பதன் கீழ் வகுப்பாக்கஞ் செய்யப்பட்ட குறித்தவொரு சுங்கத் தீர்வைக்கமைந்த நெய்யப்பட்ட துணிவகைகள் ;

(xxxviii) *2006* ஆம் ஆண்டின் *10* ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் *25* ஆம் பிரிவின்கீழ் கழிப்பனவு நோக்கங்களுக்காக அச்சட்டத்தின் கருத்துக்குட்பட வழங்குநரினால் வழங்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் சேவைகளாகவுள்ள அத்தகைய சேவைகள் ;

(xxxix) ஓவியத்தின் ஓவியக்கலைஞரினால் அதன் விற்பனையிடத்திலான ஓவியம் ;

(XL) *2012*, சனவரி *1* ஆந் தேதியிலிருந்து வர்த்தகத் திணைக்களத்தினாலான சேவைகள், *2012*, ஏப்பிறல் *1* ஆந் தேதியிலிருந்து இலங்கை முதலீட்டுச் சபையினாலான அல்லது இலங்கைத் துறைமுக அதிகாரசபையினாலான சேவைகள், இச்சட்டத்தின் கீழான வரியின் நோக்கங்களுக்காக ஏற்றுமதி யாளர்களுக்கு அல்லது சைவர் வீத மிடப்பட்ட சேவைகளாக மதிப்பிடப் பட்ட சேவைகளை வழங்குவோருக்கு வழங்கப்படும் அளவுவரை அத்தகைய சேவைகள் ;

(XLi) *2009*, ஒற்றோபர் *8* ஆந் தேதியிலிருந்து ஏற்றுமதி அபிவிருத்தித் தள்ளுபடி யாக ஏற்றுமதி அபிவிருத்தி நிதியத் திலிருந்து செலுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகை ;

(XLii) ஏதேனும் சர்வதேச நிகழ்ச்சியை இலங் கையில் நடாத்துவதன் மூலம் நாட் டிற்கான பொருளாதார நன்மையைக் கவனத்துட்கொண்டு நிதியமைச்சரி னால் அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய நிகழ்ச்சிக்கான குறிப்பிட்ட சேவைகள்;

(XLiii) *2012*, ஏப்பிறல் *1* ஆந் தேதியலிருந்து எவையேனும் நெய்யப்பட்ட துணிவகை களின் அல்லது தைத்த ஆடைகளின் தரம், தன்மை அல்லது பெறுமதி என்பவற்றிலான சீராக்கத்தை விளைவிக்கும் சேவைகள் ;

(XLiv) *2012*, ஏப்பிறல் *1* ஆந் தேதியிலிருந்து உள்ளூரில் உற்பத்திசெய்யப்பட்ட புல்லின மர எண்ணெய்.";

*(3)* அப்பாகத்தின் (இ) என்னும் பந்தியில் :-

(அ) அதன் (xxiii) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன்மூலமும் :-

"(xxiii) கருத்திட்டச் செயற்படுத்துகைக் காலப்பகுதியின்போது, *2008* ஆம் ஆண்டின் *14* ஆம் இலக்க, செயல் நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் செயல் நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்ட மொன்றாக இனங்காணப்பட்ட வொரு கருத்திட்டத்துக்கான அல்லது அதன்கண் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய அல்லது நிதியமைச்சரின் அங்கீகாரத்துடன் (ஊ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் விசேட கருத் திட்டத்துக்கான பண்டங்கள்;";

(ஆ) அதன் (xxviii) ஆம் விடயத்தில் "மின்வெளி யேற்று விளக்குகளும் வில் விளக்குக் கார்பனும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மின்வெளி யேற்று விளக்குகள், வில் விளக்குக் கார்பன், ஒலிசெலுத்திகள், ஒலிபெருக்கிகள், டிஜிட்டல் திட்பக்காட்சி நடைமுறைப்படுத்தும் கருவிகள் மற்றும் உபகரணங்கள், சினிமான ஊடகக் கருவியமைவுகள் அத்துடன் டிஜிட்டல் அளவுக் குறிப்புக் கருவிகள்"; என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(இ) அதன் (xxx) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(xxxi) சேர்பெறுமதிவரி எந்த நிபந்தனை களின்மீது பின்போடப்பட்டுள்ளதோ

அதே நிபந்தனைகளின்கீழ், 2011, யூன் 1 ஆந் தேதிக்குப் பின்னர் இறக்குமதி செய்யப்பட்ட மருந்தாக்கங்களுக்கான எந்திரத்தொகுதி அல்லது உதிரிப் பாகங்கள் உட்பட, இலங்கையில் உற்பத்திசெய்யப்படாதவையும், சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணமும் குறியீட்டு முறைமை இலக்கங்களும் என்பதன்கீழ் வகுப்பாக்கஞ் செய்யப்பட்டவையும், மருந்தாக்கங்களின் உற்பத்தியாளர்களினால் இறக்குமதி செய்யப்பட்டவையும், சுகாதார அமைச்சின் செயலாளரினால் விதந்துரைக்கப்பட்டவையுமான மருந்தாக்கங்களுக்கான எந்திரத் தொகுதியும் மருந்தாக்கங்களுக்கான எந்திரத் தொகுதிக்குரிய உதிரிப்பாகங்களும் ;

(xxxii) சேர்பெறுமதி எந்த நிபந்தனைகளின் மீது பின்போடப்பட்டுள்ளதோ அதே நிபந்தனைகளின்கீழ், 2011, யூன் 1 ஆந் தேதிக்குப் பின்னர் இறக்குமதி செய்யப்பட்ட அத்தகைய எந்திரத்தொகுதி உட்பட, சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணமும் குறியீட்டு முறைமை இலக்கங்களும் என்பதன்கீழ் வகுப்பாக்கஞ் செய்யப்பட்டு உயிர் திண்ம செங்கல் வடிவுடைய பாளங்களினதும் மரத்துடுப்புகளினதும் உற்பத்தியாளரினால் அத்தகைய எந்திரத்தொகுதி இறக்குமதி செய்யப்படும் அளவுவரை அத்தகைய தயாரிப்புகளை உற்பத்தி செய்வதற்கான எந்திரத்தொகுதி ;

(xxxiii) *அத்தகைய இனங்கள் இலங்கையில் உற்பத்தி செய்யப்படாததுடன், அவை, கமத்தொழில் அமைச்சின் செயலாளரினது விதப்புரையின்மேல் நிதிக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்படுவதற்கமைய, ஏதேனும் வகையினவான கமத்தொழில் விளைபொருட்களை அல்லது தாவரங்களை எவரேனும் வளர்ப்பவரினால் அருஞ்செடி கொடிகளுக்கான கண்ணாடிக் கூடுகள், பல்வகை ஊடுவழிகள் மற்றும் அருஞ்செடிகொடிகளுக்கான கண்ணாடிக் கூடுகளை நிர்மாணிப்பதற்கான பொருட்கள் ;*

(xxxiv) *கருத்திட்டச் செயற்படுத்துகைக் காலப் பகுதியின்போது உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கமைய, இலங்கை முதலீட்டுச் சபையுடன் செய்துகொள்ளப்பட்ட எந்த உடன்படிக்கையின்மீது கருத்திட்டச் செயற்படுத்துகைக் காலப் பகுதியின்போது வரி பின்போடப்படுகின்றதோ அந்த உடன்படிக்கையிற் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக ஏதேனும் தொழில்முயற்சியினால் பயன்படுத்தப்படுவதற்கு 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 16ஈ மற்றும் 17(அ) என்னும் பிரிவுகளின் கீழ் வரிவிலக்களிப்புக்குத் தகைமை பெற்ற அத்தகைய தொழில்முயற்சியினால் பொறித்தொகுதி, எந்திரத் தொகுதி அல்லது சாதனங்கள் ;*

(xxxv) வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா எயார்லைன்ஸ், வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா (பிறைவேட்) அல்லது வரையறுக்கப்பட்ட எயார் லங்கா கேட்டரிங் சேர்விசஸ் என்பவற்றுக்கு அனுப்பப்படுகின்ற சர்வதேசப் போக்குவரத்தாகவுள்ள சேவைகளை வழங்கும் நோக்கத்துக்காகத் தேவைப் பட்டவையும் (மோட்டார் வாகனங் களும் தனிப்பட்ட பாவனைக்கான பண்டங்களும் தவிர்ந்தவையுமான) எவையேனும் பண்டங்கள் ;

(xxxvi) இறக்குமதிமீது கிலோகிராமொன் றுக்கு எழுபத்தைந்து ரூபா என்ற சுங்கத்தீர்வை விதிக்கப்படுவதற் கமைய, ஏதேனும் பெறுமதி சேர்ப் பின்றி உள்நாட்டுச் சந்தையில் விற் பனை செய்வதற்காக, சுங்க நோக் கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரண மும் குறியீட்டு முறைமை இலக்கங் களும் என்பதன்கீழ் குறித்துரைக்கப் பட்ட நெய்யப்பட்ட துணிவகைகள்.".

*நட்டோத்தர வாதம்.*

**6**. இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்குமுன்னரான ஏதேனும் காலப்பகுதியின்போது இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகச் சேர்பெறுமதி வரியை அறவிடும் எவரேனுமாள் உரிய அதிகாரத்துடன் செயலாற்றியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறவீடு செல்லுபடியானமுறையில் செய்யப்பட்டுள்ளதாகவும், செய்யப் படுவதாகவும் கருதப்படுதலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய அறவீடு தொடர்பில் எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குகளுக்கெதிராகவும் அத்தகைய ஆளுக்கு இத்தால் நட்டோத்தரவாதமளிக்கப்படுகின்றது.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**7**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்